1987 ஏப்ரல் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அலுவலர்களாகப் பணியமர்த்தியது. முன்னாள் கிராம அதிகாரி களினால் நிரப்பப்பட்ட பணியிடங்கள் போக மீதமுள்ள கிராம நிர்வாக அலுவலர்களின் பணியிடங்களுக்காகவும் வைகு பட்டியலுக்காக (காத்திருப்போர் பட்டியலுக்காக) மொத்தப் பணியிடங்களில் 15 விழுக்காட்டுப் பணியிடங்களுக்காகவும் ஆட்களைத் தெரிவு செய்யுமாறு தமிழ்நாட்டு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட நபர்களில் வைகு பட்டியலில் உள்ள 359 பேர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் கிராம நிருவாக அலுவலர் பதவிகள் அளிக்கப்பட்டுவிட்டன.

2. அனைத்து மாவட்டங்களிலும் இப்பொழுது வெறுமையாய் உள்ள பணியிடங்கள் 195. தேர்வாணையத்தால் தெரிவு செய்யப் பட்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ள 359 பேர்களுக்கும் நில அளவை மற்றும் கிராம நிருவாகம் ஆகியவற்றில் பயிற்சியளிக்க செயற்குறிப்பொன்று அரசின் ஆய்விலுள்ளது. இவர்களுக்குப் பயிற்சியளித்தவுடன் இவர்களில் 195 பேர் தற்போது வெறுமையா யுள்ள பணியிடங்களில் பணியமர்த்தப்படுவர். மீதமுள்ளவர்கள் இனிமேல் அவ்வப்போது ஏற்படும் வெற்றிடங்களில் வரிசை முறை படி பணியமர்த்தப்படுவர். வைகு பட்டியலில் உள்ளோர் அனை வரும் தங்களுக்குப் பணி வழங்கப்படுமென்று எதிர்பார்த்தல் கூடாது. அவர்களுக்குக் கட்டாயம் பணி வழங்கப்படுமென்று உறுதி கூறவுமியலாது.

(இ) பர்மா அகதிகளுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளார். அவருக்குப் பதிலாக டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருவாய்த் துறையின் 6—12—1979 ஆம் தேதியிட்ட அரசாணை எண் 2778 இல் வியாசர்பாடி, எரிப் பகுதியில் பெரம்பூர் கிராமம் சர்வே எண் 779/33-ல் உள்பட்ட 139 ஏக்கர் நிலத்தில் 3,132 பர்மா அகதிகளுக்கு நபர் ஒருவருக்கு அரை கிரவுண்டுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ

அவர்களின் ஆக்கிரமிப்பை ஒழுங்குபடுத்தி 10—6—1979-க்கு முன்னர் அவர்களுக்கு மனை ஒப்படை செய்ய வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்டும், இதுவரை நிறைவேற்றப்படாமல் மனை ஒப்படை செய்வதில் பல முறைகேடுகள் உள்ளன என்று பர்மா தமிழர் நல உரிமை சங்கம் போராட்டம் அறிவித்துள்ளமையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தங்கள் தாராளமான உள்ளத்திற்கு நன்றி. பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை, வியாசர்பாடியில், பர்மாவிலிருந்து தாயகம் திரும்பி யோருக்காக மத்திய அரசின் நிதியுதவியோடு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, 2,881 குடும்பங்களுக்கு ரூ. 6,000 வீதம் ரூ. 1,72,86,000-மும் 251 குடும்பங்களுக்கு ரூ. 1,900 வீதம் ரூ. 4,76,900-ம் மத்திய அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையில், ரூ. 1,19,99,500-ஐ (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது லட்சத்து தொன்னூற்றொன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்) சென்னை மாவட்ட ஆட்சியர், வீடுகட்டும் திட்டத்திற்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் ஒப்படை செய்துள்ளார். 28—11—1979 நாளிட்ட வருவாய் அரசாணை எண் 2506-ல் 600 குடும்பங்கள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து பணம் பெற்று தாங்களாகவே வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு அரிசன நல வீட்டு வளர்ச்சி வாரியத்தின் மூலம் 521 வீடுகளும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 532 வீடுகளும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள 1,087 வீடுகள் கீழ்க்கண்ட காரணங் களால் முடிவு பெறாத நிலையில் உள்ளன:—

1. பக்தவத்சலம் காலனியிலுள்ள தாயகம் திரும்பியோரும், அங்கேயே வாழும் வேறு சிலரும் சென்னை உயர்நீதி மன்றத்தில் தங்கள் ஆக்கிரமிப்பை காலி செய்ததை எதிர்த்து தடை உத்தரவு பெற்றிருப்பது.

1987 ஏப்ரல் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

2. சாஸ்திரி நகரில் 800 சதுர அடி மனையில் இரண்டிற்கு மேற்பட்டோர் குடிசை அமைத்து காலி செய்ய மறுப்பது, மாற்று இடம் வழங்க வேறு இடம் இல்லாத நிலையில் 400 சதுர அடி மனை வழங்கலாம் என்ற அரசின் ஆணையை ஏற்க மறுப்பது ஆகியவை.

இதற்கிடையில், சென்னை உயர்நீதி மன்ற தடை நீக்கப்பட்டு, சென்னை மாவட்ட ஆட்சியர் 400 சதுர அடி மனை வழங்குவதற்கு புதிய வரைவுப்பட திட்டம் (Lay out) தயாரித்து வீட்டு மனை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மீதமுள்ள நாயகம் திரும்பியோர் 400 சதுர அடி மனையினை ஏற்றுக் கொண்டவுடன் சென்னை மாவட்ட ஆட்சியரால் வீட்டுக் கடன் வழங்கப்படும்.

(ஈ) திண்டுக்கல் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கழிப்பிட வசதிகள் இன்மை.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் உள்ள கழிப்பிடங்கள் தண்ணீர் வசதி செய்யப்படாமல் இரண்டு வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டு தண்ணீர் இல்லாமல் நோயாளிகள் மற்றும் மருத்துவர்கள் இன்னலுறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

திண்டுக்கல் பகுதியில் பிரதி ஆண்டும், குறிப்பாய் வறட்சி நிலவும் காலங்களில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்படுகிறது. பாறை மிகுந்த நிலப் பகுதியாக இருப்பதால் நிலத்தடி நீரும் கிடைப்பது அரிதாக உள்ளது.

2. திண்டுக்கல், மாநில தொழிலாளர் காப்புறுதி மருந்தகத்திற்குத் தண்ணீர் விநியோகம் செய்வதற்கென பொதுப் பணித் துறையினரால் 6 அங்குல குறுக்களவுள்ள ஆழ்துளைக் கிணறு 140 அடி ஆழத்திற்கு நிறுவப்பட்டு 5 குதிரைத் திறன் கொண்ட நீர் இறைக்கும் இயந்திரமும் பொருத்தப்பட்டுள்ளது. ஆயினும் நிலத்தடியில் போதுமான நீர்க்கசிவு இன்மையால் கிணற்றில் மிகக் குறைந்தளவு நீரே கிடைக்கிறது.